546

# வாய்மொழி இலக்கியம்

அ. மு. பரமசிவானந்தம், எம்.ஏ., எம்.லிட்.

தமிழ்க்கலைப் பதிப்பகம்
தமிழ்க்கலை இல்லம், சென்னை.

55

உரிமைப் பதிப்பு—டிசம்பர் 1964
மூன்றாம் பதிப்பு—நவம்பர் 1979

**விலை ரூபாய் ஆறு**

அரசாங்க மலிவு விலைத்தாளில் அச்சிடப் பெற்றது.

விற்பனை உரிமை :
**பாரி நிலையம்**
184, பிரகாசம் சாலை,
சென்னை-1

---

அச்சிட்டோர்: கற்பகம் அச்சகம், சென்னை-600 002.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | முன்னுரை | 5 |
| 1. | அன்றுமுதல் இன்றுவரை | 9 |
| 2. | எப்படித் தோன்றிற்று? | 24 |
| 3. | பழையதினும் பழையது | 44 |
| 4. | சங்க கால வாழ்வியலில் | 59 |
| 5. | இளங்கோ ஏட்டில் | 75 |
| 6. | தெய்வநெறிப் பாடல்கள் | 95 |
| 7. | பரணி பாடினர் | 110 |
| 8. | சிற்றிலக்கியங்களில் | 127 |
| 9. | பணிகளுக்கிடையில் | 148 |
| 10. | விழா—விருந்து—வேடிக்கை—விளையாட்டு | 165 |

# முன்னுரை

ஒரு நாட்டின் உண்மையான வாழ்க்கை நெறியை அறிந்து கொள்ள வேண்டுமாயின், அந்நாட்டு மக்கள் வாழும் ஒதுக்கிடங்களை நாடிச் செல்ல வேண்டும் என்ற உண்மையைத் தற்போது உலக அறிஞர் உணர்ந்து வருகின்றனர். மொழித்துறை ஆராய்ச்சி செய்யும் பெரும் பேரறிஞர்கள் அனைவரும் அம் மொழித்துறை ஆராய்ச்சியினை மூலை முடுக்குகளில்—காட்டரண் முதலிய அமைத்து வாழும் கல்லா மக்களிடம்-தொடங்க வேண்டுமென முடிவு செய்து, அத்துறையிலேயே தற்போது பணியாற்றி வருகின்றனர். காடோ, செடியோ, கடற்புறமோ என்று செல்லாத இடங்களுக்கெல்லாம் சென்று அங்கங்கே கல்லா மாக்கள் பேசும் கொச்சை மொழிகளை (dialects) ஆராய்ந்து வருகின்றனர். உண்மையில் பல நாட்டவரோடு கலந்து பழகி, பலவற்றைப் பரிமாறிக் கொண்டு வாழும் நகர மக்களைக் காட்டிலும், ஒதுக்கிடங்களில் வாழும் கல்லா மாக்களே அவ்வந்நாட்டுப் பழம் பெருமையையும் மொழியியல்பையும் வாழ்வின் அடிப்படையினையும் மங்காது வாழ வைக்கின்றனர் என்பதை உணர்ந்து வருகின்றது அறிஞர் உலகம்.

பேச்சு மொழி மட்டுமன்றி அக்கல்லா மாக்கள் பாடும் வாய்மொழி இலக்கியமாகிய நாடோடிப் பாடல்களும் அந்த வகையிலே வைத்து எண்ணத் தக்கனவேயாம்.

மேலை நாட்டு அறிஞர்கள் பலர் இந்த நாடோடி இலக்கியங்களை ஆராய்ந்து ஆராய்ந்து அவை அந்நாட்டு மங்காத செல்வங்களாக வாழ வேண்டிய தேவையை வற்புறுத்திச் செல்லுகின்றனர். பரந்த பாரத நாட்டிலும் தற்போது இவ்வுணர்ச்சி தலைநிமிர்ந்துள்ளது. அரசாங்கம் இத் துறையில் கருத்திருத்திச் செயலாற்றி வருவதுடன், தமிழ் நாட்டில் பல தனிப்பட்ட அறிஞர்களும் இத் துறைவழிச் செயலாற்றி நல்ல தொண்டு செய்து வருகின்றனர். அவர்கள் வழியே சில நல்ல தமிழ் நூல்களும் இன்று நம்மிடை வாழ்கின்றன. அவற்றுள் சிலவற்றைப் படிக்கும் வாய்ப்பு நேர்ந்த பொழுதுதான் எனக்கு இந்நூல் எழுத வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது.

இரண்டாண்டுகளுக்கு முன் சென்னை வானொலி நிலையத்தார் 'வாய்மொழி இலக்கியம்' பற்றிப் பேச வேண்டுமென விரும்பினர். அதுபோது உள்ளத்தே ஆய்வு எழுந்தது. இக்காலத்தில் தொகுக்கப் பெற்ற சில நாடோடிப் பாடல்களையும் கண்டேன். அப்படியே என்னைக் காலம் பின்னே ஈர்த்துச் சென்றது. தொல்காப்பியரையும் தாண்டிச் சென்று விட்டேன் என எண்ணுகின்றேன். ஆம்! இந்த நாடோடி இலக்கியம் இன்று நேற்று உருப்பெற்றதன்று. வரையறுத்த இலக்கிய நெறியும் இலக்கண மரபும் தோன்றுவதற்குப் பன்னெடுங்காலத்துக்கு முன்பே—ஏன்?—ஏட்டில் எழுத்து உருப்பெறு முன்பே இந்த வாய்மொழி இலக்கியம் உருவாயிற்று என்று கொள்ளுதல் பொருந்தும். அத்துணைப் பழமை வாய்ந்து 'பழையதினும் பழையதுமாய்' விளங்கும் இவ்வாய்மொழி, இன்று 'புதியதினும் புதியதாய்' மெருகேற்றப் பெற்று மிளிரும் நிலையைப் பெற்றுள்ளது. தொல்காப்பியருக்கு முன்பிருந்து வாழ்ந்த வாய்மொழி இலக்கியங்களை அவர் தொட்டுக் காட்டிச் சுட்டி விளக்கியுள்ளனர். அன்று தொடங்கி இன்று

வரை ஆராயும்போது எங்கோ ஒரு சில இடைவெளிகளைத் தவிர்த்து, எல்லாக் காலங்களிலும் இவ்வாய்மொழி இலக்கியம் வளம் பெற்றே வாழ்ந்து வந்துள்ளது என அறிகின்றோம். சங்க காலத்தில் இதைக் காப்பாற்றிய பெருமை பாணரையும் கூத்தரையுமே சாரும். அப்பாணரையும் கூத்தரையும் முன்னிறுத்திக் கவிபாடிய புலவர்களும் போற்றுதலுக்குரியவராவர். காலம் வளர வளர அறிஞர்கள் இவற்றைத் தம் காவியத்தோடு இணைத்து, தம் தம் நூல்களுக்கு ஏற்றத்தைத் தேடிக்கொள்ள நினைத்தனர். கடவுளைப் பாடியவர்களும் இவ்வாய்மொழி இலக்கியத்தை மறந்துவிட்டார் எனக் கூறமுடியாது என்பதனையும் அறிகின்றோம். இளங்கோ போன்ற பெரும் புலவர்களும் இதற்கு விலக்கானவரல்லர். இந்த அடிப்படையில் அண்மையில் வாழ்ந்த ஒரு சிலர் இவற்றின் சிறப்பையே அறிந்து சிற்றிலக்கியங்களாகப் பாடியும் அவற்றை வாழ வைத்தனர் என்பதும் கண்கூடு. இவ்வாறு ஆராயும் நிலையிலேயே வாய்மொழி இலக்கியம், எழுத்திலக்கியம் தோன்றிய அந்த நாளிலிருந்து இன்று வரை எப்படி எப்படித் தமிழில் உருப்பெற்று உயர்ந்து வந்துள்ளது என்பதைக் காண நேர்ந்தது. இது பற்றிய பல ஆங்கிலப் புலவர் தம் கருத்துக்களையும் படித்தறிந்தேன். அவ்வாறு கண்டறிந்தவற்றையே இந்நூலில் ஒன்றன்பின் ஒன்றாக வரிசைப் படுத்தி எழுதியுள்ளேன். கடும்பணிகளுக்கிடையில் அப்பணியாளரை மறக்கவைக்கும் பாடல்களையும் குறித்துள்ளேன். கடைசியாக உள்ள இரண்டொரு பகுதிகளில் இக்காலத்தில் வழங்கும் சில 'கிராமிய'ப் பாடல்களை எடுத்துக் காட்டியுள்ளேன். இவற்றுள் ஒரு சில முன்னரே அறிஞர்களால் தொகுக்கப் பெற்ற நூல்களிலிருந்து எடுக்கப்பெற்றவைகளே. சிலர் மெய் வருந்தி, பல தொல்லைகளுக்குட்பட்டுக் காடு மேடுகளையெல்லாம் கடந்து—

கல்லா மாக்கள் வாழும் இடங்களைக் கண்டு—அவர்களைப் பாட வைத்து, அப்பாடல்களையெல்லாம் தொகுத்து வெளியிட்டுள்ளனர். அவற்றுள் ஒரு சிலவற்றிலிருந்தே சில பாடல்களை நான் எடுத்துக் காட்டியுள்ளேன். அந்நூல்களின் பெயர்களையும் ஆங்காங்கே குறித்துள்ளேன். அவர்கள் அனைவருக்கும் என் நன்றிஉரித்தாகுக. கடைசிப் பகுதியில் எனது கிராமத்தும் அதன் சுற்றுப் பக்கத்திலும் வழங்கும் சில பாடல்களைத் தொகுத்துத் தந்திருக்கிறேன். அவற்றை உதவியவருக்கும் நன்றி.

இந்நூல் தொல்காப்பியர் காலத்துக்கு முன் தொடங்கி இன்று வரை உள்ள 'வாய்மொழி இலக்கிய' மரபினை ஒருவாறு காட்டுகின்றதெனினும், இதில் நான் எல்லாவற்றையும் விளக்கி விட்டேன் என்று கூற முடியாது. எனவே இதைக் காணும் அன்பர்கள் தத்தம் கருத்துக்களைத் தெரிவிப்பார்களாயின், அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதோடு அடுத்துவரும் பதிப்புக்களில் தக்கனவற்றை ஏற்று வெளியிடவும் வாய்ப்பாகும். இந்நூல் வெளிவர உதவிய அனைவருக்கும் என் நன்றி.

தமிழ்க்கலை இல்லம்
சென்னை-30
1-12-64.

பணிவுள்ள,
அ. மு. பரமசிவானந்தம்